பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 08 2024 **THURSDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் Swapnil Kusale வெண்கலப்பதக்கம் வென்றார்.

- பேரிடர் மேலாண்மை சட்டத்திருத்த மசோதா இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

- ரயில் விபத்துகளை தவிர்ப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- தமிழக அரசின் தகைசால் தமிழர் விருது திரு குமரி அனந்தனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

- இலங்கை கடற்படையினரின் ரோந்து படகு மோதியதில் உயிரிழந்த மீனவரின் குடும்பத்தினருக்கு 10 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**><<<<>>>>>**

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் Swapnil Kusale வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 50 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

*(சவுண்ட் பைட் - Swapnil Kusale – 17 செகண்ட்ஸ்)*

இப்பிரிவில் பதக்கம் வெல்லும் முதல் இந்தியர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

இப்போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற Swapnil Kusale-க்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா மூன்று பதக்கங்களை வெல்வது இதுவே முதல் முறையாகும் என்றும், வெண்கலப்பதக்கம் வென்ற Swapnil Kusale- மேலும் பல சாதனைகளை படைக்க வாழ்த்துவதாகவும் குடியரசுத் தலைவர் கூறியுள்ளார்.

பிரதமர் விடுத்துள்ள செய்தியில், Swapnil Kusale-ன் சாதனையை கண்டு நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சியடைந்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்திய இணையமைச்சர் திரு எல். முருகனும், Swapnil Kusale-ன் சாதனைகள் தொடர வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

><<<<>>>>>

பேரிடர் மேலாண்மை சட்டத்திருத்த மசோதா இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய் இதனை தாக்கல் செய்தார்.

தேசிய மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையங்களின் செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் இந்த மசோதாவில் இடம்பெற்றுள்ளன.

><<<<>>>>>

ரயில் விபத்துகளை தவிர்ப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் ரயில்வேத்துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் ரயில் விபத்துகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி காலத்தில் வருடத்திற்கு 171 என்ற எண்ணிக்கையில் இருந்த ரயில் விபத்துகள், தற்போது சாராசரியாக 68-ஆக குறைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பான ரயில் பயணத்திற்காக நடப்பு நிதியாண்டில் ஒரு லட்சத்து எட்டாயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் ரயில்வேத்துறையில் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ரயில்வே ஊழியர்கள் நலனுக்காக செயல்படுத்திய திட்டங்களையும் திரு அஷ்வினி வைஷ்ணவ் பட்டியலிட்டார்.

><<<<>>>>

சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்து வருவதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் மாநில அருங்காட்சியக மாநாட்டை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இந்திய தலைமைத்துவத்தின்கீழ் ஜி-20 உச்சிமாநாடு மற்றும் யுனஸ்கோவின் உலக பாரம்பரிய குழுவின் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்றதை அவர் சுட்டிக்காட்டினார்.

உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகம் புதுதில்லியில் ஏற்படுத்தப்பட உள்ளதாக கூறிய அமைச்சர், இதுகுறித்து விரிவான விவாதங்கள் இந்த மூன்று நாள் மாநாட்டில் நடைபெறவுள்ளதாக தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் இருந்து 150-க்கும் மேற்பட்டோர் இந்த மூன்று நாள் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

><<<<>>>>

இலங்கை கடற்படையினரின் ரோந்து படகு மோதியதில் உயிரிழந்த மீனவரின் குடும்பத்தினருக்கு 10 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ராமேஸ்வரத்தை சேர்ந்த நான்கு மீனவர்கள் இன்று அதிகாலை நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது இந்த சம்பவம் நேரிட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இதில் மீனவர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்றும், இரண்டு மீனவர்களை இலங்கை கடற்படையினர் அழைத்து சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தமக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியிருப்பதாகவும் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதற்கிடையே, இந்த சம்பவம் தொடர்பாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறை பிடிக்கப்படும் சமப்வம் அதிகரித்திருப்பதாக அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்சினையில் மத்திய அரசு உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், இந்த சம்பவம் தொடர்பாக புதுதில்லியில் உள்ள இலங்கை தூதரை அழைத்து, மத்திய அரசு கடும் கண்டனத்தை பதிவு செய்துள்ளது.

><<<<>>>>

நடப்பாண்டிற்கான தமிழக அரசின் தகைசால் தமிழர் விருது திரு குமரி அனந்தனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு சட்டப்பேரவை உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும், இலக்கிய செல்வராகவும், எவரோடும் பகைகொள்ளாத பண்பாட்டு செம்மலாகவும் விளங்கும் திரு குமரி அனந்தனை பெருமைப்படுத்தும் வகையில் இந்த விருது வழங்கப்படுவதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் சென்னையில், வரும் 15-ஆம் தேதி நடைபெறவுள்ள சுதந்திர தின விழாவில், இந்த விருதினை திரு குமரி அனந்தனுக்கு வழங்க உள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இந்த விருது தமக்கு அறிவிக்கப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக திரு குமரி அனந்தன், எமது வேலூர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - குமரி அனந்தன் - 33 செகண்ட்ஸ்)*

><<<<>>>>

அரசின் திட்டங்கள் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில், தமிழக அரசு செயல்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு எ வ வேலு கூறியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் சளுக்கை ஊராட்சியில் மாநில அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி அவர் பேசினார்.

மக்களை தேடிச்சென்று நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

><<<<>>>>>

நீலகிரி, கோவை மாவட்ட மலை பகுதிகளுக்கு உட்பட்ட ஒரு சில இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 52 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, கர்நாடக அணைகளிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் காரணமாக ஒகேனக்கலில் நீர்வரத்து அதிகரித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - தண்டபாணி – 36 செகண்ட்ஸ்)*

><<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கோவை மாவட்டம் வால்பாறையில் மண் சரிவு ஏற்படுவதற்கான வாய்ப்புள்ள பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஆட்சியர் திரு கிராந்தி குமார் பாடி கூறியுள்ளார்.

---------------

வேலூர் அரசு மருத்துவமனையில் கடத்தப்பட்ட பச்சிளம் குழந்தையை காவல்துறையினர் பாதுகாப்பாக மீட்டனர்.

----------------

துபாய், சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து சென்னைக்கு கடத்தி வரப்பட்ட எட்டு கோடி ரூபாய் மதிப்பிலான தங்கத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

-----------------

மேட்டுப்பாளையம் - குன்னூர் இடையிலான மலை ரயில் போக்குவரத்து மண் சரிவு காரணமாக இன்று ரத்து செய்யப்பட்டது.

**<<<<END>>>>>**